**அமெரிக்க கடலோர காவல்படை கப்பல் மிட்ஜெட் சென்னை துறை முகம் வந்தடைந்தது**

** குவாட் நாடுகள் மீதான சிறப்பு கவனத்துடன் சுதந்திரமான மற்றும் வெளிப்படையான இந்தோ பசிபிக் பகுதியை வலுப்படுத்துதல்*

** இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள கடல்சார் எல்லைகளை கண்காணித்து பாதுகாப்பதற்கான திறன் வளர்த்தலுக்கு ஆதரவளித்தல்*

சென்னை, செப்டம்பர் 16, 2022:

அமெரிக்க கடலோர காவல்படை கப்பலான யுஎஸ்சிஜிசி மிட்ஜெட் (United States Coast Guard Cutter Midgett) சென்னை துறைமுகத்தை இன்று வந்தடைந்தது. 2022 செப்டம்பர் 16 முதல் 19 வரை துறைரீதியான இருதரப்பு துறைமுக மற்றும் கடல்சார் பரிமாற்றங்களை மேற்கொள்ளவுள்ள மிட்ஜெட், நிபுணத்துவம் மற்றும் சிறந்த நடைமுறைகளை இரு நாடுகளின் கடலோர காவல்படையினர் பகிர்ந்து கொள்ள உதவும்.

இந்திய கடலோர காவல்படையுடனான ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் விழிப்புணர்வின் மூலம் சுதந்திரமான மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க இந்தோ பசிபிக் பகுதியை ஊக்குவிப்பதை அமெரிக்க கடலோர காவல்படை கப்பலான மிட்ஜெட் நோக்கமாகக் கொண்டுள்ளது. அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான 75 ஆண்டு கால நம்பிக்கை மிகுந்த கூட்டை குறிக்கும் வகையிலும், அமெரிக்க மற்றும் இந்திய கடலோர காவல்படைகள் இடையேயான உறவை வலுப்படுத்தும் வகையிலும் மிட்ஜெட்டின் பயணம் அமைந்துள்ளது.
2022ம் ஆண்டு கோடைகாலத்தில் நடைபெற்ற உலகின் மிகப்பெரிய சர்வதேச கடல்சார் போர்முறை பயிற்சியான ரிம்பக்-கை (ரிம் ஆஃப் தி பசிபிக்) தொடர்ந்து இது நடைபெறுகிறது. இந்தோ பசிபிக் பகுதியில் கப்பல் போக்குவரத்து சுதந்திரத்தில் முக்கிய பங்காற்றும் வகையில் படையினரிடையே கூட்டுறவை விரிவுபடுத்துவதற்காக 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமெரிக்க கடலோர காவல்படை கப்பல் ஸ்ட்ரேட்டன் சென்னை வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த பயணத்தின் போது பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் இந்திய கடலோர காவல்படையினருடனான சந்திப்புகள் மற்றும் பயிற்சிகளை தொ

டர்ந்து மாலத்தீவுக்கும் மிட்ஜெட் செல்லவுள்ளது. யூஎஸ் ஸ்கேன் ஈகிள் ட்ரோன், எம் எச்-
65 ஹெலிகாப்டர் மற்றும் இதர அதிநவீன உபகரணங்களை கொண்டுள்ள யுஎஸ்சிஜிசி மிட்ஜெட்,
2021ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் கேப்டன் வில்லி கார்மைக்கேல் தலைமையில் செயல்படுகிறது. மத்திய கிழக்கு பகுதியில் இயங்கும் அமெரிக்க கடலோர காவல்படை ரோந்துப் படைகளின் தென்மேற்கு ஆசிய பிரிவின் தலைவராக (கொமோடர்) கேப்டன் கார்மைக்கேல் இதற்கு முன் பணியாற்றினார்.

"இந்தோ பசிபிக் பகுதியில் உள்ள பங்குதாரர்களுடன் நீண்டகால நல்லுறவை அமெரிக்க கடலோர காவல்படை பேணி வருகிறது," என்று கூறிய கேப்டன் கார்மைக்கேல்,
"இந்திய கடலோர காவல்படையுடன் அடுத்த நான்கு நாட்களை செலவிடவுள்ள நாங்கள், சுதந்திரமான மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க இந்தோ பசிபிக் பகுதி குறித்த ஒத்த கருத்துடைய எங்கள் பங்குதாரர்களுடனான அர்த்தமுள்ள உரையாடல்கள் மூலம் எங்கள் திறன் மற்றும் இணைந்து செயலாற்றும் தன்மையை மேம்படுத்திக்கொள்ள பணியாற்றுவோம்," என்று தெரிவித்தார்.

மிட்ஜெட்டின் சென்னை வருகை குறித்து பேசிய புது தில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் கடற்படை அதிகாரியான (Naval Attaché
) கேப்டன் டேவிட் வில்காக்ஸ்,
"சர்வதேச விதிமுறைகள் சார்ந்த ஒழுங்கிற்கு உட்பட்டு கடற்பகுதிகளில் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கான நமது கடலோர காவல்படைகளின் உறுதியை இந்த பயணம் வெளிப்படுத்திகிறது," என்றார்.

யுஎஸ்சிஜிசி மிட்ஜெட்டை சென்னை துறைமுகத்திற்கு வரவேற்ற சென்னையில் உள்ள அமெரிக்க துணைத்தூதர் ஜூடித் ரேவின்,
"மிட்ஜெட்டையும் அதன் குழுவினரையும் சென்னைக்கு வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தோ பசிபிக் நாடுகளில் ஒன்றாக இருப்பதில் அமெரிக்கா பெருமை கொள்கிறது. நமது முக்கிய நலன்கள் இப்பகுதியை சார்ந்துள்ளன. இந்தோ பசிபிக் பகுதியில் அமெரிக்காவின் முக்கிய பங்குதாரராக இந்தியா திகழ்கிறது. மிட்ஜெட்டின் சென்னை பயணத்தின் போதான அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான கூட்டு செய

ல்பாடுகள், சுதந்திரமான மற்றும் பாதுகாப்பான இந்தோ பசிபிக் பகுதிக்கான லட்சியத்தை நோக்கிய நமது உறவை மேலும் வலுவாக்கும் என்று நான் நம்புகிறேன்," என்று கூறினார்.

இந்தோ பசிபிக் பகுதியில் 150 வருட கால தொடர் செயல்பாடுகளை அமெரிக்க கடலோர காவல்படை கொண்டுள்ளது. அமெரிக்க 7வது கப்பற்படை தளபதியின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மிட்ஜெட் கப்பலை, பங்குதாரர்களுடனான தொழில்முறை பரிமாற்றங்கள், திறன்-வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் ரோந்து உள்ளிட்ட செயல்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**அமெரிக்க கடலோர காவல்படை கப்பலான மிட்ஜெட் பற்றி**

யுஎஸ்சிஜிசி மிட்ஜெட் என்பது அமெரிக்க கடலோர காவல்படையின் புதிய ரக கட்டர் வகை கப்பல்களில் மிகப்பெரியது மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டது ஆகும். அமெரிக்க கடலோரக் காவல்படையின் முக்கிய அங்கமாக திகழும் இக்கப்பல், கடல்சார் உள்நாட்டுப் பாதுகாப்பு பணிகளை ஆதரிப்பது உள்ளிட்ட மிகவும் சவாலான செயல்பாடுகளில் ஈடுபடும் திறன் கொண்டது.

மரபு வகை கட்டர் கப்பல்களுடன் ஒப்பிடும்போது, லெஜண்ட் கிளாஸ் நேஷனல் செக்யூரிட்டி கட்டர் எனப்படும் இக்கப்பல் அதிக வேகம், அதிக திறனோடு விளங்குவதோடு மட்டுமில்லாமல், விமான ஆதரவு வசதிகள் மற்றும் ஹெலிகாப்டர்கள், ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கான தளம் ஆகியவற்றை வழங்குகிறது. சிறு படகுகளை மீட்கும் வசதியையும் இது கொண்டுள்ளது.

மிகவும் கடினமான கடல் சூழல்களில் செயல்படும் திறனை இக்கப்பல் கொண்டுள்ளது. வலுவான கட்டுப்பாட்டு அமைப்பு, தகவல் தொடர்பு வசதிகள், கணினிகள், நுண்ணறிவு, கண்காணிப்பு மற்றும் நவீன உபகரணங்களை இவ்வகை கப்பல்கள் கொண்டுள்ளன. சட்ட அமலாக்கம் மற்றூம் தேசிய பாதுகாப்பு பணிகளிலும், பங்குதார முகமைகளுடனான செயல்பாடுகளிலும் இவை ஈடுபடுகின்றன.

மறைந்த ரியர் அட்மிரல் ஜான் ஆலன் மிட்ஜெட்டின் நினைவாக இக்கப்பலுக்கு மிட்ஜெட் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

1918ம் ஆன்டில் பிரிட்டிஷ் டார்பெடோ பீரங்கி மிர்லோவிடம் இருந்து 42 பணியாளர்களை வீரத்துடன் மீட்டதற்காக, உயிரைக் காப்பாற்றுவதற்கான அமெரிக்காவின் உயரிய விருதான தங்க உயிர்காக்கும் பதக்கத்தை மிட்ஜெட் பெற்றார். அவரது பெயர் சுமந்த கப்பல் சுமார் 170 அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை தாங்கி செல்லும் வசதிகொன்டது ஆகும்..

**யுஎஸ்சிஜிசி மிட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்**

* நீளம்: 418 அடி

* உத்திரம் (பீம்): 54 அடி

* டிரா ்ப்ட்: 22 அடி

* டிஸ்பிளேஸ்மென்ட்: 4700 எல் டி

* மாஸ்ட் உயரம்: 154 அடி

* அதிகபட்ச வேகம்: 28 கேடிஎஸ்

* மொத்த பணியாளர்கள்: 143 (அதிகாரிகள்: 23, மாலுமிகள்: 120)

புகைப்பட விளக்கம்: நான்கு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க கடலோர காவல்படை கப்பல் மிட்ஜெட், செப்டம்பர் 16 அன்று சென்னை துறைமுகத்தை வந்தடைந்தது.